ஆனுல், அத்தனைபேர்களும் இந்த தீர்மானத்தை ஏகமனதாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஏகமனதாக இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படவிருக்கிறது என்ற நம்பிக்கை தரும் வகையில் இது அமைந்திருக்கிறது. ஆகவே, இந்தத் தீர்மானத்தை எல்லோரும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம். என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டு, இதை நிறைவேற்றித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—
"சிக்கிம்மை இந்திய ஒன்றியத்தின் ஒரு மாநிலமாக ஆக்குவதற்கென, "1975-ம் ஆண்டு அரசமைப்பு (முப்பத்தாருவது.திருத்த) சட்டம்" என்று மாற்றப்பட்ட குறுந்தலைப்பினைக் கொண்ட 1975-ம் ஆண்டு அரசமைப்பு (முப்பத்தெட்டாவது திருத்த) சட்ட முன்வடிவின் வாயிலாக, நாடாளுமன்றத்து ஈரவைகளும் நிறைவேற்றியுள்ள, அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 368, பகுதி (2)-து வரம்புரையின் எல்லையளவிற்குள் வரும் சட்டத் திருத்தங்களை இப் பேரவை ஏற்று உறுதி செய்கிறது."

அரசினர் தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

(1) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) பேரவையை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைப்பது குறித்து

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவையை நாள் குறிப்பிடாமல் ஒத்திவைக்கலாம் என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை நாள் குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-15 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.